**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 258 of 2023

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.தமிழரசி

Date : 08.01.2025

***1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி***

4) நான் பட்டா 3417, 3418 தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த இரண்டு பட்டாக்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த பட்டாக்கள் நாகராஜன் மனைவி பூங்காவனம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் என் கணவர் பெருமாள் கோவிந்தன், முத்துகுமரன், பழனி ஆகியோரிடம் இருந்து வாங்கிய சொத்து என்றால் சரிதான். இந்த சொத்துக்களை எனது கணவர் பூங்காவனத்திற்கு விற்றார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆற்றை ஒட்டி இருப்பதாக சொல்லியிருக்கிறேன். அதற்கான எந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமித்து சொத்துக்கள் ஆற்றை ஒட்டி அமைந்துள்ளதை நிருபிப்பதற்கு நான் வழக்கறிஞர் யாரையும் நியமிக்கவில்லை.

5) 1, 2 பிரதிவாதிகள் சொத்துக்களை கோவிந்தசாமிக்கு விற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கோவிந்தசாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த கிரையத்தை பற்றியும் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1ம பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவர் உயிருடன் இருக்கும் வரை வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் இல்லை என்றால் சரியல்ல. என் மாமனார்

ஊரின் நலத்திற்காக சுடுகாட்டிற்காக நிலத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றும் அதனால் ஊரில் உள்ளவர்கள் தூண்டி விட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு பாகம் கேட்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.